

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்த படவுள்ள, பல பதவி ஒரு தேர்வு (Multi Post Single Choice) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பெல் பொறியாளர்கள் சரி பார்க்கும் பணியினை இன்று (24.08.2016) நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 566/2016 நாள்: 24.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்தபடவுள்ள பல பதவி ஒரு தேர்வு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை சரிபார்க்கும் பணியினை இன்று (24.08.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு பயன்படுத்த படவுள்ள, பல பதவி ஒரு தேர்வு (Multi Post Single Choice) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பெல் பொறியாளர்கள் சரி பார்க்கும் பணியினை இன்று (24.08.2016) நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி, நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு, தமிழ்நாட்டில் முதல் முறையாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் பல பதவி ஒரு தேர்வு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்த படவுள்ளது. இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பெல் துணை மேலாளர் திரு. செல்வகுமார் அவர்கள் தலைமையில், திரு. எஸ். சந்திரசேகர், திரு.ஒய். சந்திரசேகர், திரு. நிதின்குமார் மற்றும் திரு. கிரி என 4 பொறியாளர்கள், 771 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 180 கட்டுப்பாட்டு கருவிகளும் சரி பார்க்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 114 ஊராட்சி வார்டுகளில், மாவட்ட ஊராட்சி வார்டு, ஊராட்சி ஒன்றிய வார்டு, ஊராட்சி தலைவர், ஊராட்சி வார்டு என 4 பதவிக்கு ஒரு கட்டுப்பாட்டு கருவியும், 4 வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ரிசர்வ்ட் என 125 கட்டுப்பாட்டு கருவிகளும், 575 வாக்குப்பதிவு இயந்திரங்களும், குழித்துறை நகராட்சி மற்றும் இடைக்கோடு, கடையல், களியக்காவிளை, பாக்கோடு மற்றும் பழுகல் என 5 பேரூராட்சிகளுக்கு, பேரூராட்சி தலைவர் அல்லது நகராட்சி தலைவர் மற்றும் கவுன்சிலர் ஆகியோர்களுக்கு ஒரு கட்டுப்பாட்டு கருவியும், 2 வாக்குப்பதிவு இயந்திரங்கள் என மொத்தம் 157 கட்டுப்பாட்டு கருவியும், 358 வாக்குப்பதிவு இயந்திரங்களும் பயன்படுத்தப்படவுள்ளது. தற்போது 55 கட்டுப்பாட்டு கருவியும், 196 வாக்குப்பதிவு இயந்திரங்களும் சரி பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. இவை அனைத்தும் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கெட்சி லீமா அமலினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) திரு. பது முகம்மது நசீர், திரு. உமர் முஹம்மத் (தேர்தல்), ஊசூர் மேலாளர் (வளர்ச்சி) திருமதி. சுமதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. விஜயன் (மேல்புறம்), திரு. பகவதிபெருமாள் (இராஜாக்கமங்கலம்), திரு. அனில்குமார் (தேர்தல்), செயல் அலுவலர்கள் திரு. ஏசுபாலன், திரு. இராஜாமணி, திரு. கிறிஸ்டோபர் தாஸ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.